Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. STC 27/2021

**P.W**.1 (LW2)

| | |
|---|---|
| Name | : **திரு. சுரேஷ்** |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2வது எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 02.02.2017ம் தேதி மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுடன், நானும், தலைமை காவலர் 1226 செல்வராஜ் ஆகியோர் கிடைத்த ரகசிய தகவலின் படி அமணம்பாக்கம் புதிய காலணி அருகே மதுவிலக்கு வேட்டையில் இருந்த போது எதிரியின் வீட்டருகே ஒரு ஆண் நபர் கோணிப்பைகளுடன் நின்றுக் கொண்டிருந்தார். சந்தேகம் வரவே அங்கு சென்று பார்த்தபோது எங்களை கண்டு தப்பி ஓட முயன்றவரை பிடித்து விசாரணை செய்தபோது அவரின் பெயர் கெம்புராஜ் என்று கூறினார். பின்னர் அவர் வைத்திருந்த கோணி

பைகளை சோதனை செய்து பார்த்தபோது ஒரு கோணி பையில் 100 மி லி அளவு கொண்ட 200 பாக்கெட்டுக்கள் வீதம் மொத்தம் 20 லி விஷ நெடியுடன் கூடிய நீர்த்த எரிசாராய பாக்கெட்டுக்களை வைத்திருந்தவரை அதே இடத்தில் 6 மணியளவில் காவல் ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் அவரிடமிருந்து எரிசாராய பாக்கெட்டுக்களை மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும் சாட்சி தலைமை காவலர் 1226 செல்வராஜ்சும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின் ரசாயன பகுப்பாய்விற்காக வேண்டி மாதிரிகளை எடுத்தது போக மீதமிருந்த எரிசாராயத்தை கொட்டி அழித்தார். எதிரி கெம்புராஜ் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் எதிரியுடனும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

சம்பவ இடத்தில் 2வது எதிரியை நான் பார்க்கவில்லை என்றாலும் அவரை சம்பவ இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் சரிதான். மேல் அதிகாரியின் அழுத்தம் காரணமாக 2வது எதிரி இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும் இந்த

வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.